27.11.2025.

MCOP.NO. 804/2022

R.W. 1.திரு. மகேஷ்குமார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :

எங்கள் காப்பீட்டு நிறுவனத்தை பொறுத்தமட்டில் இறந்த நபர் 3ம் தரப்பினர் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பாலிசி ஐந்து வருட வாகன சேதம் மற்றும் 3ம் தரப்பினர் பாலிசி. முதல் ஒரு வருடத்திற்கு வாகன உரிமையாளர் பர்னசல் பாலிசி போடப்பட்டுள்ளது, பாலிசியில் ரூ.750/– தனிநபர் காப்பீட்டிற்காக பணம் வசூல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒவ்வொரு வருடத்திற்கும் ரூ.750/– தனிநபர் இழப்பீட்டிற்காக வசூல் செய்யப்படவேண்டும் என்று பாலிசிநிபந்தனைகளில் உள்ளதா என்றால் இல்லை. IRDA ன் 2018ம் ஆண்டு வழிகாட்டுதல் படி ஒவ்வொரு ஆண்டிற்கும் தனிநபர் இழப்பீட்டிற்காக பணம் வசூல் செய்யப்படாமல் பாலிசி கொடுக்கக்கூடாது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பாலிசி நகல் 1ம் எதிர்மனுதாரருக்கு முதன்முதலாக கொடுக்கப்பட்ட பாலிசி என்று சொன்னால் சரிதான். அதன்பிறகு தனிநபர் காப்பீட்டிற்காக பணம் செலுத்தியிருந்தால் அந்த பாலிசி துலங்காது என்று சொன்னால் சரிதான்.

நான் 1ம் எதிர்மனுதாரரிடம் வசூல் செய்த ரூ.750/- ஐந்து வருடத்திற்கும் தனிநபர் காப்பீட்டிற்காக செலுத்தப்பட்ட தொகை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court and read over to the witness and acknowledge by him to the correct

I Additional District Judge,

Tirunelveli.